



**தினமலர் (30.11.2023)**



புகழூர் டிஎன்பிஎல் நிறுவனம் சார்பில் செயல் இயக்குனர் சீனிவாசன் தலைமையில் அதிகாரிகள் புகழூர் நகராட்சி தலைவர் குணசேகரனிடம் சமூக பங்களிப்பு நிதிக்கான காசோலை வழங்கினர். அருகில் துணைத்தலைவர் பிரதாபன்.

# புகழூர் நகராட்சிக்கு நிதி

## வழங்கியது டிஎன்பிஎல்

**வேலாயுதம்பாளையம்:** புகழூர் டிஎன்பிஎல் நிறுவனம் சார்பில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் புகழூர் நகராட்சிக்கு நிதி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. புகழூர் நகராட்சியின் பல்வேறு திட்டப்பணிகளின் பயன்பாட்டிற்காக நமக்கு நாமே திட்டத்தின் கீழ் டிஎன்பிஎல் நிறுவனம் தனது சமூக பங்களிப்பு தொகையை வழங்க முடிவு செய்தது. அதற்கான நிகழ்ச்சியில் புகழூர் நகராட்சி தலைவர் குணசேகரன், துணைத் தலைவர் பிரதாபன் மற்றும் ஆணையர் பால்ராஜ் ஆகியோரிடம் டிஎன்பிஎல் செயல் இயக்குனர் (இயக்கம்) சீனிவாசன், பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன், முதுநிலை மேலாளர் (மனித வளம்) சிவக்குமார், மேலாளர் (மனித வளம்) ராஜா ஆகியோர் காசோலை வழங்கினர்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2021-2023 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 26-11-2023 (ஞாயிற்றுக்கிழமை) 10 பக்கம் ₹ 5 ★ மலர் 46 இதழ் 344

TRICHY 26-11-2023 (SUNDAY) 10 PAGES ₹ 5 VOL: 46 ISSUE: 344



புகழூர் நகராட்சி திட்ட பணிகளுக்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் சார்பில் சமூக பங்களிப்பு தொகைக்கான காசோலையை வழங்கிய போது எடுத்த படம்.

புகழூர் நகராட்சி திட்ட பணிகளுக்காக

# காகித ஆலை நிறுவனம் சார்பில் காசோலை வழங்கல்

வேலாயுதம் பாளையம்,நவ.26–

கரூர் மாவட்டம் புகழூர் நகராட்சி நிர்வாக திட்டப் பணிகள் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் சார்பில் சமூக நலத்துறை (சி.எஸ்.ஆர்), நமக்கு நாமே திட்டத்தின் கீழ், தங்களது சமூக பங்களிப்பு தொகைக்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

புகழூர் நகர்மன்ற தலைவர் சேகர் என்கிற குணசேகரன் முயற்சியினால், புகழூர் நகராட்சி நிர்வாகத்தின் பல்வேறு திட்டப் பணிகள் பயன்பாட்டிற்காக நமக்கு நாமே திட்டத்தின் கீழ், தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் சார்பில் தங்களது சமூக பங்களிப்பு தொகைக்கான காசோலையை புகழூர் நகராட்சி தலைவர் சேகர் என்கிற குணசேகரன் , நகராட்சி துணைத் தலைவர் பிரதாபன் மற்றும் புகழூர் நகராட்சி ஆணையர் பால்ராஜ் ஆகியோரிடம் செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்தின் செயல் இயக்குநர்( இயக்கம்) சீனிவாசன், பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், முதுநிலை மேலாளர்( மனிதவளம்) சிவக்குமார், மேலாளர் (மனித வளம்) ராஜா ஆகியோர் வழங்கினர். நிகழ்ச்சியில் காகித ஆலை ,நிர்வாக அலுவலர்கள் உடன் இருந்தனர்.